**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 31/2017**

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 23.01.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : குஞ்சம்மாள் Husband Name : செல்லமுத்து

துவக்க நேரம்: 03.43 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நான் தற்பொழுது தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.10,11,12 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பற்றி வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.10-ல் உரிமையாளர்கள் பெயர் 1-ல் நாகியம்பட்டி செல்லமுத்து படையாட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது அவரது தந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல், வா.த.சா.ஆ.11-ல் பட்டாதாரர் பெயர் உரிமையாளர்கள் நாகியம்பட்டி செல்லமுத்து படையாட்சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது அவரது தந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.12-லும் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) எனது கணவர் எப்பொழுது இறந்தார் என்றால் கடந்த 30 ஆண்டுகள் முன்பு இறந்துவிட்டார். பொதுவாக இறந்த நபர் பெயரில் பட்டா, அடங்கல் உள்ளிட்ட ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன நபர்கள் பெயரில் பட்டா, அடங்கல் வழங்கப்படமாட்டது என்பதால் வா.த.சா.ஆ.10,11, 12 ஆகிய

ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும் மேற்கண்ட ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நபர் எனது கணவர் இல்லை என்றாலும் சரியல்ல. பொய்யான ஆவணங்களை தயார் செய்து வழக்கில் தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3) தாவா சொத்திற்கான ஆவணம் எனது பெயரிலோ அல்லது எனது பிள்ளைகள் பெயரில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் சொல்வது போல் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக தயார் செய்த ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர்கள் பிரதிவாதிகள் என்றாலும் உண்மையான உரிமையாளர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 03.54 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.31/2017, Dt.23.01.2026.